வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 08.07.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பிரேசில் தலைநகர் பிரேசீலியா-வில், அந்நாட்டு அதிபரை சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக, நாளை பிரேசிலில் இருந்து, நமீபியா செல்கிறார்.

சுற்றுச் சூழலை பாதுகாப்பதில், போக்குவரத்துத் துறைக்கே பொறுப்பு அதிகம் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தேசிய தகவலியல் மையத்துடன் இணைந்து, இன்று மாலை நடைபெறும் விழாவில், துறை ரீதியிலான சேவை இணைய தளங்களை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார்.

---

மோடி-பிரேசில் (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பிரேசில் தலைநகர் பிரேசீலியா-வில், அந்நாட்டின் அதிபர் திரு. லூயி இனாசியோ லூலா டா சில்வா-வை சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார். ரியோ-டி-ஜெனிரோவில் நடைபெற்ற, 17ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில்

கலந்து கொண்ட பின்னர், நேற்று இரவு பிரேசிலியா வந்து சேர்ந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, பாரம்பரிய பிரேசீலிய நடனங்களுடன், சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரேசீலியாவில் உள்ள இந்திய சமூகத்தினரும், விமான நிலையத்தில் கூடி நின்று, பிரதமர் திரு. நரேந்திர மோடியை உற்சாகமாக வரவேற்றனர். வேருடன் தொடர்புகளை விட்டு விடாத இவர்களின் அன்பான வரவேற்பு, எப்போதும் நினைவில் கொள்ளத் தக்கது என்று சமூக ஊடகத்தில் பிரதமர் கூறியுள்ளார். இப்பயணத்தின் போது, இந்தியாவிற்கும், பிரேசிலுக்கும் இடையே, வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி, வேளாண்மை, சுகாதாரம், மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து, பிரதிநிதிகள் நிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளன. இருநாடுகளுக்கும் இடையே, 2 உடன்பாடுகளும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

-------------------------

*மோடி-நமீபியா (6)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகள் பயணத்தின் இறுதி கட்டமாக, பிரேசிலில் இருந்து நாளை, நமீபியா செல்கிறார். நமீபியா அதிபரின் அழைப்பின் பேரில், இப்பயணம் மேற்கொள்ளப் படுகிறது. இது, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முதலாவது நமீபியா பயணமாகவும், இந்திய பிரதமர் ஒருவரின் 3ஆவது நமீபியா

பயணமாகவும் அமைகிறது. பிரதமரின் நமீபியா பயணம் குறித்து கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

*மோடி-நமீபியா 2 (15)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது நமீபியா பயணத்தின் போது அந்நாட்டின் அதிபர் திருமதி நெட்டும்போ நந்தின்டாய்த்வா-வை சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார். இரு தலைவர்களுக்கு இடையே, பிரதிநிதிகள் நிலையிலும் பேச்சு வார்த்தை நடைபெற உள்ளது. இயற்கை வளங்கள் அதிகம் உள்ள நாடான நமீபியாவுடன், எண்ணெய்-எரிவாயு, முக்கிய உலோகங்கள், அபூர்வ கனிமங்கள், ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து, இப்பேச்சு வார்த்தைகளின் போது முக்கியத்துவம் அளிக்கப்படும். நமீபியாவில், இந்தியாவின் யுபிஐ-டிஜிட்டல் பணப் பரிமாற்ற தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் விவாதிக்கப்படும். உலக உயிரி எரிபொருள் கூட்டணி, சர்வதேச பெரும் பூனைகள் கூட்டணி உள்ளிட்ட இந்தியாவின் முன் முயற்சிகளில், நமீபியா இணையும் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. நமீபியாவில், அந்நாட்டின் முதலாவது அதிபர் சாம் நுஜோமா நினைவிடத்திலும், பிரதமர் திரு. நரேந்திர மோடி அஞ்சலி செலுத்த இருக்கிறார்.

-------------------------

*ராணுவம்* (7)

எதிர்காலப் போர் சூழல்களில், முப்படைகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, கடற் படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி, விமானப் படைத் தலைவர் ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங், தலைமை ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி ஆகியோர் இன்று புதுடெல்லியில், மூத்த ராணுவ அதிகாரிகளிடையே உரையாற்றினர். முப்படைகளுக்கு இடையே, ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில், தங்களின் உறுதிப்பாட்டையும் இவர்கள் வலியுறுத்தினர்.

------------------------

*கட்கரி சுற்றுச் சூழல்* (17)

நாட்டில் 40 சதவிகித மாசுப்பாடுகளுக்கு போக்குவரத்துத் துறைதான் நேரடி காரணம் என்பதால், சுற்றுச் சூழலை பாதுகாப்பதில், போக்குவரத்துத் துறைக்கே பொறுப்பு அதிகம் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் ஒருபகுதியாக, ஃபரிதாபாத்-நொய்டா சர்வதேச விமான நிலைய நெடும்பாதையில் இன்று நடைபெற்ற மரம் நடும் விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கம், பூமி தாய்க்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்றும், இது அனைத்து குடிமக்களின் கலாச்சார, மற்றும் தார்மீக பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். மூங்கிலைக் கொண்டு பல்வேறு

பொருட்களை தயாரிக்க முடியும் என்பதால், மக்களிடையே மூங்கில் பயன்பாடு அதிகரிக்க வேண்டும் என, அமைச்சர் வலியுறுத்தினார். இந்தியாவின் மோட்டார் வாகன உற்பத்தித் துறை, ஜப்பானை தாண்டி உலகின் 3ஆவது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும், இத்துறையினால், சுமார் நாலரைக் கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருப்பதோடு, நாட்டின் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்து இருப்பதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------

*ஹஜ் பயணம்* (14)

மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் ஹஜ் கமிட்டி, 2026ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான விண்ணப்ப நடைமுறைகளை தொடக்கி உள்ளது. அதிகாரப்பூர்வ ஹஜ் இணைய தளம், மற்றும், ஹஜ் சுவிதா மொபைல் செயலி மூலமாக, இம்மாத இறுதி வரை, விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், இயந்திரம் மூலம் வாசிக்கத் தகுந்த இந்திய பாஸ்போர்ட் வைத்திருக்க வேண்டும் என்றும், பாஸ்போர்ட் செல்லுபடித் தன்மை, அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை இருக்க வேண்டியது கட்டாயம் என்றும், அமைச்சகம் கூறியுள்ளது. ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்புவோர், விண்ணப்பத்தை சமர்பிக்கும் முன்பாக, பயணத்திற்கான தங்களின் தயார் நிலையை நன்கு பரிசீலித்துக் கொள்ள வேண்டும் என்றும், விண்ணப்பம் ஏற்கப்பட்ட பின்னர், உரிய

காரணமின்றி பயணத்தை ரத்து செய்தால் அபராதம் செலுத்த நேரலாம் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*புதுச்சேரி விழா* (12)

புதுச்சேரியில், மாநில அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையும், தேசிய தகவலியல் மையமும் இணைந்து, இன்று மாலை ஏற்பாடு செய்துள்ள விழாவில், துறை ரீதியிலான சேவை இணைய தளங்களை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள். அனைவருக்குமான டிஜிட்டல் வசதிகளை, **பன்மொழி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள்** மூலம் மாநிலங்களுக்கு வழங்குவதற்கான மத்திய அரசின் **பாஷினி ராஜ்யம்** முன்முயற்சி குறித்து, புதுச்சேரி அரசுக்கும், **டிஜிட்டல் இண்டியா பாஷினி பிரிவுக்கும்** இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தமும், இந்நிகழ்ச்சியின் போது கையெழுத்தாகிறது.

-------------------------

*பந்த்* 1 (13)

மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர்களுக்கு எதிராக அமைந்து இருப்பதாக கூறியும், அவற்றை திரும்பப் பெற வலியுறுத்தியும், அனைத்து தொழிற்சங்க அமைப்புகள், மற்றும். இண்டியா கூட்டணி சார்பில், நாளை புதுச்சேரியில் முழு அடைப்புப் போராட்டம்

அறிவிக்கப் பட்டுள்ளது. நாடு தழுவிய பொது வேலை நிறுத்தப் போராட்டத்தின் ஒருபகுதியாக புதுச்சேரியில் அறிவிக்கப் பட்டுள்ள இந்த பந்த் போராட்டத்திற்கு, ஆட்டோ, டெம்போ, மற்றும், தனியார் பேருந்து சங்கங்களும், மார்க்கெட் வியாபாரிகள் சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. ஒரு சில தனியார் பள்ளிகள் விடுமுறை அறிவித்துள்ளன. பந்த் போராட்டத்தினால் மக்கள் பாதிக்கப் படுவதை தவிர்க்க, புதுச்சேரி அரசு தேவையான முன்னேற்பாடுகளை செய்து வருகிறது. அசம்பாவிதங்களை தடுக்க, போலீஸ் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. பந்த் போராட்டம் குறித்து எமது செய்தியாளர் வழங்கும் தகவல்கள்.....

**(வாய்ஸ்-கந்தன்)**

**------------------------**

தமிழ்நாடு விபத்து (17)

கடலூர்-ஆலப்பாக்கம் இடையே, இன்று காலை, விழுப்புரம்-மயிலாடுதுறை பாசஞ்சர் ரயில், பள்ளி வேன் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், 3 குழந்தைகள் உயிரிழந்தனர். மேலும் ஐவர் காயமடைந்தனர். விபத்து குறித்து தெற்கு ரயில்வே நிர்வாகம் வருத்தம் வெளியிட்டுள்ளது. காயமடைந்து, புதுச்சேரி ஜிப்மரில் சேர்க்கப் பட்டுள்ள குழந்தைகளின் உடல் நிலையை ரயில்வே டாக்டர்களும், கண்காணித்து வருகின்றனர். விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. விபத்து குறித்து தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் துயரம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்த குழந்தைகளின்

பெற்றோர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து, தலா 5 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். பலத்த காயமடைந்தவர்களுக்கு, தலா 1 லட்சம் ரூபாயும், லேசாக காயமடைந்தவர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் உதவி அறிவிக்கப் பட்டுள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், அஇஅதிமுக பொதுச் செயலர் திரு. எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

-------------------------

*புதுச்சேரி விபத்து* (10)

புதுச்சேரியில் உசுட்டேரி அருகே இன்று காலை இருசக்கர வாகனம் மீது, டிப்பர் லாரி மோதியதால் ஏற்பட்ட விபத்தில், பள்ளிக் குழந்தைகள் இருவர் உயிரிழந்தனர். இருசக்கர வாகனத்தில், குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் சென்ற தந்தை, விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுவதாகக் கூறியும், இதை தடுக்க நடவடிக்கை எடுக்க கோரியும், பொது மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். காலையிலும், மாலையிலும் நெருசல் மிகுந்த நேரத்தில், கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படும் என, காவல் துறை அதிகாரிகள் உறுதி அளித்ததை தொடர்ந்து போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

-------------------------

*வானிலை* (10)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என,

சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில், மணிக்கு 50 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 10ஆம் தேதி வரை, ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட 2 முதல், 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் சின்னக் கல்லாரில் 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

*கிரிக்கெட் டெஸ்ட் (4)*

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான, 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, லண்டனில் நாளை மறுநாள் தொடங்க உள்ளது. 5 போட்டிகளை கொண்ட இத்தொடரில், தற்போது இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று, சமநிலையில் உள்ளன.

------------------------

*மகளிர் கிரிக்கெட் (7)*

இந்தியா-இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான, 4ஆவது இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி, மான்செஸ்டரில், நாளை நடைபெற உள்ளது. 5 போட்டிகளை கொண்ட இத்தொடரில், தற்போது 2 க்கு-1 என்ற கணக்கில், இந்தியா முன்னிலையில் உள்ளது. 5ஆவது மற்றும் இறுதி இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி, வரும் சனிக்கிழமை, பெர்மிங்ஹாமில் நடைபெறும். இந்தியா-இங்கிலாந்து மகளிர்

அணிகளுக்கு இடையே, 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளும் நடைபெற உள்ளன.

-------------------------

*மலேரியா* (13)

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க, இதுவரை தனி மருந்து இல்லாத நிலையில், தற்போது நோவார்டிஸ் மருந்து உற்பத்தி நிறுவனம், இத்தகைய முதலாவது மருந்து ஒன்றுக்கு, சுவிஸ் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்றுள்ளது. மலேரியா நோயினால் ஏற்படும் உயிரிழப்புகளில், 5 வயதிற்கு உட்பட்டவர்கள்தான் அதிகம் என்பதால், புதிய மருந்தின் கண்டுபிடிப்பு, உலக அளவில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. கோவார்ட்டம் என்னும் இப்புதிய மருந்தின் உற்பத்தி மற்றும் வினியோகம், மலேரியா தாக்குதல் அதிகம் உள்ள ஆப்ரிக்காவில், அடுத்த சில வாரங்களில் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. 2023ஆம் ஆண்டில், உலக அளவில், 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மலேரியா நோய்க்கு பலியானதும், இதுவரை இந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, வயது வந்தோருக்கான மருந்துகளே குறைந்த அளவில் கொடுக்கப்பட்டு வந்ததும், குறிப்பிடத்தக்கது.

-------------------------

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பிரேசில் தலைநகர் **பிரேசீலியா-வில்**, அந்நாட்டு அதிபரை சந்தித்து, **இருதரப்பு பேச்சு வார்த்தை** நடத்துகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, **5 நாடுகள் பயணத்தின்** இறுதிக் கட்டமாக, நாளை பிரேசிலில் இருந்து, **நமீபியா** செல்கிறார்.

சுற்றுச் சூழலை பாதுகாப்பதில், போக்குவரத்துத் துறைக்கே **பொறுப்பு அதிகம்** என்று, மத்திய **சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர்** திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், **தேசிய தகவலியல் மையத்துடன்** இணைந்து, இன்று மாலை நடைபெறும் விழாவில், **துறை ரீதியிலான சேவை இணைய தளங்களை**, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**